**கம்பொல நகர சபை**
**கண்டி மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 28 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை 2019 மே 21 ஆம் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 28 ஆம் திகதியும் தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2018 திசெம்பர் 31 இல் கம்பொல நகர சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) **கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 4 காணிகள் மற்றும் கட்டிடங்களில் அபிவிருத்தி செலவினம் ரூபா 2,617,875 குறைத்து மூலதனமாக்ககப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | 3 வேலைகளின் பெறுமதி மூலதனமாக்ககப்பட்டுள்ளது. |
| (ii) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,591,226 பெறுமதியான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களும் ரூபா 548,213 பெறுமதியான ஆயர்வேத ஔடத இருப்பும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

(ஆ) **இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் காட்டப்படும் கூட்டுத் தொகை ரூபா 53,657,082 ஆன 03 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் மற்றும் துணைப்பதிவேடுகளில் | தொடர்புடைய மீதிகளின் வித்தியாசத்திற்கான சீராக்கம் செய்யப்பட வேண்டும். | வித்தியாசத்தை பரிசீலனை செய்து சரி செய்யப்படுவதாக அறிவிக்கிறேன். |

காட்டப்படும் மீதிகளிடையில் ரூபா 2,701,240 வித்தியாசம் ஆனது.

(இ) **பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | ஒராண்டு காலத்தை விஞ்சியிருந்த பெற வேண்டிய கணக்கு மீதிகளில் பெறுமதி ரூபா 90,979,928 ஆனது. | பெற வேண்டிய மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | தொடர்புடைய நிறுவனங்களை அறிவூட்டப்பட்டுள்ளது. |
| (ii) | 1 ஆண்டு காலத்தை விஞ்சியிருந்த செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளில் பெறுமதி ரூபா 23,108,852 ஆனது. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் வழங்கப்பட்டில்லை. |

(ஈ) **கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகளின்மை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 46,516,252 பெறுமதியான 03 கணக்கு விடயங்கள் தொடர்பாக துணை பதிவேடுகள் மற்றும் மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதங்கள் போன்ற சான்றுகள் சமர்பிக்கப்படாததனால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக ஒப்பாய்வு செய்ய முடியாதிருந்தது. | நிதிக் கூற்றுக்களில் காட்டப்படும் கணக்கு மீதிளை உறுதிப்படுத்தும் சான்றுகள் முன்வைக்கப்பட வேண்டும். | அட்டவணைகள் கண்டறிய முடியாததுடன், அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன்.<br>மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதங்கள் கோரி உள்ள போதும் பதில் அளிக்கப்படவில்லை.<br>மீதி அறிக்கை கோரி உள்ள போதும் இதுவரை கிடைத்திருக்கவில்லை. |

## 1.4 இணங்காமை

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | நகர சபை கட்டளைச் சட்டத்தின் 36(உ) | சபைக்கு சொந்தமான காணி மற்றும் கட்டிடங்களை குத்தகைக்கு வழங்கும் போது விடய பொறுப்பு அமைச்சின் | நகர சபை கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு | சில ஆதனங்கள் சபை தீர்மானம் மீது குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | முன்கூட்டிய அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளாமல் சபை அங்கீகாரம் மீது குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. | இணங்கி நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் மதிப்பீடு மீத அமைச்சரின் அங்கீகாரத்துடன் குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | 2016 மார்ச் 17 திகதிய 2016/03 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் 01 மற்றும் 4(1) ஆம் பந்திகள் | 2016 ஆண்டில் டென்டர் செய்யயப்பட்ட கடையறைகளிலிருந்து ஒரே முறையில் செலுத்தும் பணம் ரூபா 86,512,738 அறவிடப்பட்டில்லாததுடன், கடைவாடகை தாமத கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஆலோசனை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 ஆண்டு முதல் தாமத கட்டணம் அறவிடபடுகிறது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 77,971,316 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 26,731,108 ஆனது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| ரூபா 569,500 பெறுமதியான மறுக்கப்பட்ட காசோலைகள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | மறுக்கப்பட்ட காசோலைகள் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். |

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (ை) | வீத வரி மற்றும் குத்தகை | 29,800,000 | 31,936,586 | 30,616,461 | 45,014,756 | 3,190,000 | 63,788,716 | 30,823,412 | 49,005,556 |
| (ைை) | வாடகை | 12,000,000 | 13,505,481 | 9,180,131 | 18,745,201 | 10,509,000 | 12,440,539 | 8,689,463 | 14,594,084 |
| (ைைை) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 2,600,000 | 2,824,831 | 2,784,831 | 40,000 | 2,500,000 | 2,663,854 | 2,663,854 | - |
| (ைஎ) | ஏனைய வருமானம் | 48,140,000 | 12,570,838 | 29,968,107 | 93,566,930 | 32,050,000 | 55,745,470 | 30,258,818 | 49,441,827 |
| | | 92,540,000 | 60,837,736 | 72,549,530 | 157,366,887 | 48,249,000 | 134,638,579 | 72,435,547 | 113,041,467 |

## 2.3.2 வருமானம் சேகரித்தலின் செயலாற்றுகை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டினுள் சேர்க்கப்பட வேண்டிய மொத்த வருமானம் ரூபா 173,879,203 ஆன போதும், ஆண்டினுள் சேர்க்கப்பட்ட வருமானம் ரூபா 72,549,530 ஆனமையால் வரமானம் சேகரிப்பதன் முன்னேற்றம் 42 சதவீதமானது. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். |

## 2.3.3 வீத வரி மற்றும் குத்தகை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 12 அரச நிறுவனங்களிடமிருந்து ரூபா 2,412,466 உம் வழகறிஞர் அலுவலக கட்டிட தொகுதியிலிருந்து ரூபா 98,082 ஆன தொகை அறவிட வேண்டியதாக நிலவியது. | அரச நிறுவனங்களிடமிருந்து அறவிட வேண்டிய தொகையை அறவிட வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். |

## 2.3.4 வாடகை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நீண்ட காலமாக அறவிப்படாத ரூபா 983,303 ஆன இறைச்சிக் கடை வாடகை மீதயொன்று ஆனது. | கடை வாடகை காலத்திற்கேற்ப அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன் |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | வழகறிஞர் அலுவலக் கட்டிட தொகுதியிலிருந்து ரூபா 352,241 ஆன குத்தகை வாடகை நிலுவை ஆனது | குத்தகை வாடகை காலத்திற்கேற்ப அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கெள்கிறேன் |
| (இ) | பொதுச் சந்தை மீன் கடையறைகள் குத்தகைக்கு வழங்கி 5 வருடங்கள் விஞ்சியிருந்த போதும், ரூபா 1,665,238 ஒரே தடவை செலுத்தும் பணம் மற்றும் புதிய மதிப்பீடு பிரகாரம் கடை வாடகை ரூபா 711,660 அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஒரே தடவை செலுத்தும் பணம் சுற்றறிக்கை பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் கிடைக்கவில்லை. |
| (ஈ) | இபொச பஸ் தரிப்பிடத்திற்க அருகில் உள்ள கடை தொகுதியிலிருந்து, குத்தகை வாடகை ரூபா 1,697,074 அறவிடப்பட்டிருக்கவில்லை. | குத்தகை ஒப்பந்தத்தின் பிரகாரம் செயற்படுத்தி சபை நிதியத்திற்கு பெற வேண்டிய வருமானத்தை பெற்றுக் கொள்ள வேண்டும். | நிலுவை பணத்தை அறவிடுவதற்கு வழக்கறிஞர் ஊடாக கோரிக்கைப் பத்திரமொன்று அனுப்பப்பட்டது. |
| (உ) | பொது வியாபார கட்டிடத் தொகுதியில் கடை யறைகள் 5 வருடங்களுக்கு ஒரு முறை மதிப்பிட வேண்டிய போதும் 2008 ஆண்டிற்கு பின்னர் மதிப்பிப்பட்டிருக்கவில்லை. | கடை யறைகள் 5 வருடங்களுக்கு ஒரு முறை மதிப்பிட வேண்டும். | பொதுச் சந்தை தோல்வியடைந்த கருத்திட்டமாகும். வாடிக்கையாளர்கள் பொதுச் சந்தைக்கு வருகைதராததனால் கடையறைகள் மூடப்பட்டுள்ளது. பில்யிடப்பட்டில்லாதனால் மதிப்பிடப்படவில்லை. |
| (ஊ) | பொதுச் சந்தை கடையறைகளிலிந்து ரூபா 5,132,158 ஆன பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | குத்தகை ஒப்பந்தத்தின் பிரகாரம் செயற்படுத்தி சபை நிதியத்திற்கு பெற வேண்டிய வருமானத்தை பெற்றுக் கொள்ள வேண்டும். | பதில் கிடைத்துவில்லை. |
| (எ) | கம்பளை புகையிரத நிலைய பாதைக்கு மேல் நிர்மாணிக்கப்பட்டுள்ள வியாபார கட்டிடத் தொகுதியில் 2005 முதல் 2018 ஆண்டுகள் வரை காலத்திற்கான ரூபா 9,980,988 ஆன கடை வாடகை அறவிடப்படவில்லை. | சபை நிதியத்திற்கு கிடைக்க வேண்டிய வருமானம் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | 6789 இலக்கத்தின் கீழ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. |
| (ஏ) | காணி குத்தகை தொடர்பாக 35 குத்தகைகாரரிகளிடம் அறவிட வேண்டிய முக்கிய பணம் ரூபா 13,500,921 மற்றும் 112 பேர்களிடம் வருட குத்தகை ரூபா 2,119,398 அறவிடப்படவில்லை. | முக்கிய பணம், குத்தகை முறையாக அறவிடப்பட வேண்டும். | சபை தீர்மானத்தின் மீது காணி ஒதுக்கப்பட் போதும் அரச மதிப்பீட்டிற்கு அமைச்சரின் அங்கீகாரத்திற்கு முன்வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**2.3.5 ஏனைய வருமானம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) வாடி வீடு கட்டணம் | | |
| 2018 ஆண்டினுள் வாடிவீடு கட்டணம் அறவிடப்பட்டிருக்காததுடன், நிலுவை வாடிவீடு கட்டண மீதி ரூபா 1,611,276 ஆனது. | குறித்த கட்டணம் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். |
| **(ஆ) பொது மலசல கூட கட்டணம்** | | |
| பல வருடங்கள் முதல் தீர்க்காத பொது மலசல கூட கட்டண மீதி ரூபா 1,102,887 ஆனது. | குறித்த கட்டணம் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். |

2.3.6 **நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பெற வேண்டியதாக இருந்தது நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 2,543,294 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 84,873,710 ஆனது. | குறித்த பணம் சபைக்கு அழைப்பித்துக் கொள்ள வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றுகை**

நகர சபை கட்டளைச் சட்டத்தின் 04 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்கள் நலன், இலகு மற்றும் நலன்புரிச் சேவைகள் போன்ற சபையினால் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

(அ) **துணைச் சட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நகர சபை கட்டளை சட்டத்தின் 157 பிரிவின் கீழ் 15 பிரதான விடயங்களை செய்வதற்காக துணைச் சட்டம் விதிக்கபட வேண்டிய போதும் 07 விடயங்களிற்கு மாத்திரம் துணைச்சட்டம் விதிக்கப்பட்டிருந்தது. | துணைச் சட்டம் விதித்து வருமானம் ஈட்டுவதத்தை செய்ய வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். |

(ஆ) **ஒதுக்கீடு செய்யப்படாமை**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் பிரகாரம் சபையினால் மேற்கொள்ளவிருந்த 26 செயற்பாடுகளை மேற் கொண்டிருக்கவில்லை. | சபையினால் மேற் கொள்ள வேண்டிய செயற்பாடுகளை செயல் நடவடிக்கை திட்டத்திற்க உள்ளடக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். |

(இ) **எதிர்பார்த்த வெளியீட்டு மட்டத்தை** (out put) **பெற்றுக் கொள்ளாமை**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| 3 மாடிகளை கொண்டு நிர்மாணிக்க திட்டமிட்ட பொதுச் சந்தையின் 2 மாடிகள் ரூபா 2,002,742,936 செலுத்தப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்தன. 13 ஆண்டுகள் கடந்திருந்தும், மேல் மாடியை நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்படாததுடன், கொன்கிரீட் பகுதிகள் வெடித்து அவ்விடங்களினால் மழை நீர் கசிந்திருந்தது. | எதிர்பார்த்த வெளியீட்டு மட்டத்தை அடைந்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | சபை இக் கருத்திட்டத்தின் ஒருங்கிணைப்பை மாத்திரம் செய்துள்ளது. மேல் மாடியில் நீர் கசிவதை தடுக்க கூறை ஒன்றை அடிக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. |

(ஈ) **கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| சபை அதிகார எல்லையினுள் தினத்தோறும் ஒன்று சேறும் கழிவுப் பொருட்களை முகாமை செய்வதற்கான முறையான வேளைத்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக நீண்ட கால வேளைத்திட்டம் ஒன்று தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | கம்பொல நகர சபைக்கு சொந்தமாக கழிவு பொருள் வெளியிடும் இடமொன்று இல்லாததனால் குண்டசாலை மற்றும் கண்டி கொம்போஸ்ட் கொட்டில்களுக்கு பணம் செலுத்தி கழிவுப் பொருள் வெளியிடப்பட்டுள்ளது. |

(உ) **நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் இலக்குகளை இனங்கண்டு அவற்றை அடைந்து கொள்ள மற்றும் முன்னேற்றத்தை அளவிடுவதற்கான அளவுகோள்களை இனங்கண்டிக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்கண்டு அவற்றை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் வழங்கியில்லை. |

3.2 **முகாமைத்துவ வினைத்திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆசிய அபிவிருத்தி கடனுக்காக நீண்ட காலமாக செலுத்த வேண்டிய ரூபா 497,132 மீதியொன்று ஆனது. | செலுத்த வேண்டிய மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கடன் மீதியை தீர்ப்பதற்கு மீதி உறுதிப்பாட்டை கோரிய போதும், பதில் கிடைக்கவில்லை. |
| (ஆ) | மின்சார சபைக்கு ஒப்படைத்திருந்த ரூபா 42,063,401 ஆன சொத்தை அறவிடப்பட்டிருக்கவில்லை. | பெற வேண்டிய மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | முற்பணம் தீர்குமாறு எழுத்து மூலம அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (இ) | பொதுச் சந்தையின் 102 கடையறைகள் வியாபார செயற்பாடுகள் இன்றியும் 36 கடையறைகள் குத்தகைக்கு வழங்காமலும் மூடப்படடிருந்தன. | எதிர்பார்த்த நலன்கள் அடைந்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் சமர்ப்பித்திருக்கவில்லை. |

3.3 **மனித வள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகை | | |
| (i) | 8 ஊழியர் மிகை மற்றும் 37 ஊழியர் வெற்றிடங்கள் ஆனது. | மிகை ஏற்படாதவாறும் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். |
| (ii) | 04 காரியாலய சேவை உதவியாளரும், 04 பாதை மற்றும் சுகாதார ஊழியர்களும், | பதவிக்குரிய கடைமைகளை ஒப்படைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் கிடைக் வில்லை. |

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 03 மாதர் கிளினிக் உதவியாளர்களும் அலுவலக கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | | |

(ஆ) ஊழியர் கடன்

| | | |
|---|---|---|
| 01-18 ஆண்டு வரை காலத்திற்குரியதாக அறவிடப்படாமல் இருந்த ரூபா 710,242 ஆன ஊழியர் கடன் மீதியொன்று நிலவியது. | ஊழியர் கடன் திர்திக்கொள்ள வேண்டும். | மாகாண திறைசேரி ஊடாக தீர்திக்கொள்ள கடிதம் அனுப்பப்பட்டது. |

## 3.4 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 05 ஆண்டுகளிற்கு ஒரு முறை சபை சொத்துக்கள் மதிப்பிடப்பட வேண்டிய போதும், 2008 இன் மதிப்பீட்டின் மீது 2018 இலும் வீத வரி அறவிடப்பட்டிருந்தது. | வீத வரி அறவிடப்படும் பிரதேச சொத்துக்கள் 05 ஆண்டுகளிற்கு ஒரு முறை மதிப்பிடப்பட வேண்டும். | இறுதியாக 2009 இல் மதிப்பிடப்பட்டுள்ளது. புதிய மதிப்பீடொன்றை செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| சபையின் 15 வழக்கறிஞர் அலுவலகங்களின் 10 வருட ஒப்பந்த காலம் முடிவடைந்திருந்த போதும், முறையாக மதிப்பீடு மற்றும் டெண்டர் விடப்பட்டு குத்தகை வழங்கப்படவில்லை. | ஒப்பந்தத்திற்குட்படுத்தி மதிப்பிட்டு டென்டர் நடைமுறையில் குத்தகை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் கிடைக்கவில்லை. |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 சொத்துக்கள் பதிவிடப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்க சொந்தமான சொத்துக்கள் மதிப்பீடு செய்து பதிவிடப்பட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சொத்துக்களை பதிவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | சொத்துக்கள் பதிவேட்டை நாளாதுவரையாக்க நடவடிக்கை எடுக்கிறேன். |

3.5.2 **விளைவற்ற/ குறைபயன்பாட்டுச் சொத்தக்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 1,235,220 பெறுமதியான 5 வகை சொத்துக்கள் விளைவற்று நிலவியன. | பழுதுபார்த்து பயன்படுத்த அல்லது உரிய முறையில் பராதீனம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏலவிற்பனை செய்வதற்கான பொருட்களை ஏலவிற்பனைக்கும், பழுதுபார்த்தலுக்கும், டெக்டரை காட்சிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கபடகிறது. |

3.5.3 **வருடாந்த பொருட்/ இருப்பு கணிப்பீடு**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | 2018 ஆம் ஆண்டிற்கு பொருட் கணிப்பீடு மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பொருட் கணிப்பீடு மேற் கொள்ள வேண்டும். | எதிர்காலத்தில் இந்த குறைபாடுகளை சரி செய்கிறேன். |
| (ஆ) | 2017 மெய்மை ஆய்வின் போது ஏலவிற்பனைக்கு சிபாரிசு செய்யப்பட்டிருந்த ரூபா 215,954 பெறுமதியான பொருட்கள் ஏழவிற்பனை செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஏலவிற்பனைக்கு சிபாரிசு செய்யப்பட்டிருந்த பொருட்கள் ஏழவிற்பனை செய்ய வேண்டும். | எதிர் வரும் பொருட் கணிப்பீட்டின் கிடைக்கும் பொருள்களுடன் ஏலவிற்பனை செய்கிறேன். |

3.6 **பெறுகை**

ஒப்பந்த நிருவாகம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| **நகர சபை கேட்போர் கூடத்தை சபை கூடமாக மாற்றுதல்** | | |
| சபை நிதியத்தை பயன்புடத்தி நகர சபை கேட்போர் கூடத்தை சபை கூடமாக மாற்றும் ஒப்பந்தத்தின் திறந்த மணுக் | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையை பின்பற்ற வேண்டும். | சபையின் நிதி நிலைமையை கருத்திற் கொண்டு இரண்டு கட்டங்களாக செய்யப்பட்டது. துரிதமாக புதிய கட்டிடத்தை |

| | | |
|---|---|---|
| கோரல் தேவைப்பாட்டை காட்டாமல் இருக்க கட்டம் 1 இற்கு ரூபா 2,000,000 மற்றும் கட்டம் 11 இற்கு ரூபா 2,000,000 என மட்டுப்படுத்தப்பட்ட மனுக் கோராமலும் கூட்டுறவு அபிவிருத்தி சங்கத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. | | நர்மானிக்கும் தேவைப்பாடு நிலவியது. |